112—

பால் குளிரூட்டும் நிலையம்

***22062—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, புதூர், அழகியபாண்டியபுரம், பிள்ளையார்குளம் பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள புதூர், அழகியபாண்டியபுரம், பிள்ளையார்குளம் ஆகிய பகுதிகளில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க உத்தேசித்து அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரம் தந்து, வாழ்வுயர உரம் தந்து, தனித்து நின்றே வெற்றி வாகை சூடும் திறம் தந்த எங்களது புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) தனித்து நின்றே வெற்றி வாகை சூடும் திறம் தந்த எங்களது தாயுருவ சாமி, தனித்து நின்றே வெற்றி வாகை சூடும் எங்களது தாயுருவ சாமி, தாயுமானவர் சாமி தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்களது திருநெல்வேலி தொகுதிக்கு ஏற்கெனவே கால்நடை மருத்துவக் கல்லூரி, பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தந்துள்ளார்கள். மேலும், எனது திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்குக் குடிநீர்த் திட்டம் உள்ளிட்ட பணிகளுக்கு*

250 கோடி ரூபாய்க்கும் மேலாகத் தந்துள்ளார்கள். திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வானூர் பகுதியில் 56 கோடி ரூபாய்க்கு குடிநீர்த் திட்டங்கள் கொடுத்துள்ளார்கள். இவ்வாறு, ஏற்கெனவே பல்வேறு திட்டங்களைத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொகுதிவாரியாக, தமிழ்நாடு முழுவதிலும் இருக்கின்ற ஒவ்வொரு தொகுதிக்கும் பலவகையான திட்டங்கள், விலையில்லா திட்டங்கள் தந்ததன் விளைவாக, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், 39 இடங்களுக்கு, 37 இடங்களில் வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) இனி தமிழகத்தில் எதிர்க் கட்சிகளுக்கு வேலையே இல்லை என்கின்ற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அகில இந்திய அளவில் மூன்றாவது மிகப் பெரிய கட்சியாக உயர்த்திக் காட்டிய (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த, மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

113—

சொந்தக் கட்டடம்

***7305—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, மங்கலம் ஊராட்சியிலுள்ள ஊரகக் கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விருதுநகர் தொகுதி, மங்கலம் ஊராட்சியிலுள்ள துணை கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்று கேள்வி கேட்டிருந்தார்கள். அந்தக் கேள்வி இந்த அவைக்கு